இந்திய உச்சநீதிமன்றம்

2022 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15 ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு. எம். ஆர்.ஷாஹ்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. கோலி

புதிய ஓக்லா தொழில்துறை மேம்பாட்டு ஆணையம்

எதிர்

ஓம்வீர் சிங் மற்றும் பலர்

நிலம் கையகப்படுத்தும் சட்டம், 1894:பிரிவுகள் 4,6,18- நிலம் கையகப்படுத்துதல் - இழப்பீட்டுத் தொகை அதிகரிப்பு - 22.11.1982 தேதியிட்ட அறிவிப்பின்மூலம் கேள்விக்குள்ளான நிலம் நொய்டாவின் திட்டமிடப்பட்ட வளர்ச்சிக்காக கையகப்படுத்தப்படுதல் - ஒரு பிகாவுக்கு ரூ.30,000/- இழப்பீடு வழங்குதல் - உண்மையான உரிமையாளர்-எதிரமேல்முறையீட்டாளரின் தந்தை வழங்கப்பட்டத் தொகைக்கு எதிராகவும், இழப்பீட்டை அதிகரிக்கக் கோரியும் பிரிவு 18 இன் கீழ் குறியீடு வைத்தல் - குறியீடு தள்ளுபடி செய்யப்பட்டது - மறுஆய்வு விண்ணப்பமும் தள்ளுபடி செய்யப்பட்டது - மறுஆய்வு விண்ணப்பங்கள் ள்ளுபடி செய்யப்பட்ட தேதியிலிருந்து 16 ஆண்டுகளுக்குப் பிறகு, எதிர்மேல்முறையீட்டாளர் மேல்முறையீடு தக்கல் செய்தார் - காலதாமதத்தை மன்னித்த உயர்நீதிமன்றம், இழப்பீட்டுத் தொகையை சதுர அடிக்கு ரூ.297/- ஆக

உயர்த்தி வழங்கியது எனினும் காலதாமத காலத்திற்கு வட்டி மறுக்கப்பட்டது - மேல்முறையீட்டில் தீர்முடிவு: அறிவிக்கையின் 5 ஆண்டுகள் பின்னரான அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட இழப்பீடு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் இழப்பீட்டை தீர்மானிப்பதற்கான அளவுகோலாக இருக்க முடியாது - உ.பி. ஆவாஸ் அவம் விகாஸ் பரிஷத் வழக்கில் இந்த நீதிமன்றத்தால் வகுக்கப்பட்ட சட்டத்தைப் தற்போதைய வழக்கில் பயன்படுத்தும்பொழுது, தற்போதைய வழக்கில் கையகப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து 5 ஆண்டுகளுக்குப் பிறகு கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு வழங்கப்படும் அதே நஷ்டஈட்டிற்க்கான உரிமை உரிமை கோருபவர்களுக்கு இல்லை - பொருண்மையின் அடிப்படையில், பிரிவு 4 இன் கீழான அறிக்கை 22.11.1982 அன்று வெளியிடப்பட்டது, சார்வுறப்பட்ட முடிவுகள் மகன்பூர் கிராமம் மற்றும் பிற கிராமங்கள் தொடர்பான முடிவுகள் 1986/88 ஆம் ஆண்டை சார்ந்த முடிவுகள் என்பதால் அவை அடிப்படையாக இருக்கமுடியாது - 16/26 ஆண்டுகள் காலதாமதத்தைப் பொறுத்தவரையில், உயர் நீதிமன்றம் இழப்பீட்டை உயர்த்தும் போது, தாமத காலத்திற்கு வட்டியை மறுத்தது, எனவே காலதாமதத்தை மன்னித்து உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் தலையிட எந்த காரணமும் இல்லை காலதாமதத்தை மன்னிக்கும் வகையில் உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு - எனவே சதுர அடிக்கு ரூ.297/- இழப்பீடு வழங்கி உயர்நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் உத்தரவு நிலைக்கத்தக்கதல்ல மேலும் உண்மையான உரிமைகோருநர்கள் சதுர அடிக்கு ரூ.120/- இழப்பீடு பெறவே தகுதியுள்ளவர்கள்.

மேல்முறையீட்டை பகுதியாக அனுமதித்த நீதிமன்றத்தின்

தீர்முடிவு 1.1: 16/26 ஆண்டுகள் காலதாமதத்தை மன்னித்து பிழைப்புரிந்த உயர்நீதிமன்றம், இந்த வழக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட போது அதன் அசாதாரணமான பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டுள்ளது, அதே நேரத்தில் இழப்பீட்டுத் தொகையை

அதிகரித்து, வழக்கை விசாரித்தப்போதும் தாமதமான காலத்திற்கு வட்டியை மறுத்துள்ளது மேலும் உரிமைகோருநர்களுக்கு சாதகமாக தன் விருப்புரிமையை பயன்படுத்தியுள்ளது என்ற பொருண்மைகளை கருத்தில்கொள்ளும்போது, இந்த வழக்கை விசாரிக்க உயர்நீதிமன்றம் காலதாமதத்தை மன்னித்து வழங்கிய உத்தரவில் தலையிடத் தேவையில்லை.

1.2 இந்த கையகப்படுத்தல் 1982 ஆம் ஆண்டைச் சேர்ந்தது மற்றும் சார்வுறப்பட்ட மற்ற எல்லா முடிவுகளும் 1986/88 ஆம் ஆண்டைச் சேர்ந்த கையகப்படுத்துதல்கள் ஆகும். ஒரு சதுர அடிக்கு ரூ.297/- நஷ்டஈடு வழங்கப்பட்ட அந்த வழக்குகளில், நொய்டா/காசியாபாத்தின் வளர்ச்சிக்காக கையகப்படுத்தப்பட்ட மகன்பூர் கிராமம் மற்றும் அருகிலுள்ள பிற கிராமங்களின் கையகப்படுத்துதல்களை பொறுத்தவரை அவை 1986/1988 ஆம் ஆண்டுகளைச் சார்ந்ததாகும். எனினும், அதன் பின் உ.பி. ஆவாஸ் அவம் விகாஸ் பரிஷத் வழக்கிலும் 1982 ஆம் ஆண்டு கையகப்படுத்தப்பட்ட மகன்பூர் மற்றும் பிற சுற்றியுள்ள கிராமங்கள் சம்பந்தப்பட்ட நரேந்திரா வழக்கில் இந்நீதிமன்றத்தில் தீர்ப்பைப் பரிசீலித்த பின்பும், இந்த நீதிமன்றம் சதுராடிக்கு ரூ.120/- என்று நிர்ணயித்துள்ளது. 1988 ஆம் ஆண்டு கையகப்படுதலுடன் தொடர்புடைய நரேந்திரா வழக்கில் வழங்கப்பட்ட ரூ.297/- நஷ்டஈடு கோரப்படுவதை மறுக்கும்போது, அறிவிக்கை செய்த 5 ஆண்டுகளுக்கு பின்னர் என்ற அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட இழப்பீட்டை, 5 ஆண்டுகளுக்கு முன்னர் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு அளவுகோலாக கருத முடியாது என்று இந்நீதிமன்றம் கூறியுள்ளது. இந்த நீதிமன்றம், 1982 மற்றும் 1987/1988 இற்கு இடைப்பட்ட ஆண்டுகளில் மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்ற சங்கதியையும் கவனத்தில் கொண்டுள்ளது. உ.பி. ஆவாஸ் அவம் விகாஸ் பரிஷத் வழக்கில் இந்நீதிமன்றம் வகுத்த சட்டத்தை தற்போதைய வழக்கில் செலுத்தும் பொது, தற்போதைய வழக்கில் கையகப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து 5 ஆண்டுகள் கழித்து கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு வழங்கப்படும் அதே இழப்பீட்டை பெற உரிமை கொருநர்களுக்கு உரிமை இல்லை. பொருண்மையின் அடிப்படையில், நிகழ் வழக்கில், பிரிவு

4 இன் கீழான அறிக்கை 22.11.1982 அன்று வெளியிடப்பட்டது, சார்வுறப்பட்ட மகன்பூர் கிராமம் மற்றும் பிற கிராமங்கள் தொடர்பான முடிவுகள் 1986/88 ஆம் ஆண்டை சார்ந்த முடிவுகள் என்பதால் அவை உ.பி. ஆவாஸ் அவம் விகாஸ் பரிஷத் வழக்கின் தீர்ப்பில் இந்த நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளபடி ,அடிப்படையாக இருக்கமுடியாது. மேற்சொன்ன சூழ்நிலைகளின்படி, சதுர அடிக்கு ரூ.297/- இழப்பீடு வழங்கி உயர்நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் உத்தரவு நிலைக்கத்தக்கதல்ல மேலும் உண்மையான உரிமைகோருநர்கள் சதுர அடிக்கு ரூ.120/- இழப்பீடு பெறவே தகுதியுள்ளவர்கள் என முடிவுக்கூறப்படுகிறது.

1.3 உயர் நீதிமன்றம் வழங்கிய குறையுற்ற தீர்ப்பும், உத்தரவும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அசல் உரிமை கோருபவர்களுக்கு ஒரு சதுர அடிக்கு ரூ.120 வீதம் இழப்பீட்டுத் தொகை வழங்கவும் நிலம் கையகப்படுத்துதல் சட்டம், 1894 இன் கீழ் மற்ற அனைத்து சட்டரீதியான சலுகைகள் மற்றும் வட்டி வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. எனினும் உரிமைகோருபவர்களுக்கு உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதில் தாமதமான காலத்திற்கு அதாவது மறுஆய்வு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட நாளிலிருந்து முதல் மேல்முறையீடு தாக்கல் செய்யப்படும் வரை 1894 ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் உயர்த்தப்பட்ட இழப்பீட்டுத் தொகைக்குரிய வட்டி உட்பட சட்டபூர்வ பலன்களுக்கு உரிமை இல்லை.

சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள் மூலமாக ஆஷா ராம் (இறந்தவர்) மற்றும் பலர் எதிர் உ.பி. அவம் விகாஸ் பரிஷத் மற்றும் ஒருவர் (2022) 2 எஸ்.சி.சி 567 – சார்வுறப்பட்டது.

நரேந்திரா மற்றும் பலர் எதிர் உத்தரப் பிரதேச மாநிலம் மற்றும் பலர் (2017) 9 எஸ்.சி.சி 426 : [2017] 11 எஸ்.சி.ஆர் 540 – குறித்துக்காட்டப்பட்டது.

பார்வையிடப்பட்ட தீர்ப்புகள்

[2017] 11 எஸ்சிஆர் 540	குறித்துக்காட்டப்பட்டது	பத்தி 3.2
(2022) 2 எஸ்.சி.சி 567	சார்வுறப்பட்டது	பத்தி 5.2

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: உரிமையியல் மேல்முறையீடு எண் 9085/2022.

அலஹாபாத் உயர்நீதிமன்றத்தின் முதல் குறையுற்ற மேல்முறையீடு எண் 308/2015 இன் 28.01.2020 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவிற்கெதிராக.

அர்தெண்டுமௌளி குமார் பிரசாத், அரசு கூடுதல் வழக்கறிஞர், ரவீந்திர குமார், ரஞ்சி தாமஸ், யதீந்திர சிங், பிரதீப் காந்த், மூத்த வழக்கறிஞர்கள், பினய் குமார் தாஸ், திருமதி பிரியங்கா தாஸ், செல்வி. நேஹா தாஸ், அஜய் குமார், அபய் குமார் தயால், செல்வி. மான்வி தீட்சித் சர்மா, திருமதி. தருணா அர்தேந்துமௌலி பிரசாத், ஹரபிரசாத் சாகு, பிரணய குமார் மொஹாபத்ரா, அஜித் சிங் புந்திர், டி.வி. சிங், அரிஜீத் சிங், செல்வி. சாந்தி ஸ்வரூப் சிங், சவுரவ் ராய், கௌஷல் சர்மா, பிரபுத் சிங், விஷால் மாலிக், ரஜ்னிஷ் குமார் ஜா, சந்தன் குமார், விமல் ஜான்சன் கெர்கெட்டா, செல்வி. சுஷ்மா, செல்வி. மோனிகா, செல்வி. பாபிலா கே. கே., திருமதி சலோனி சரண், மகேஷ் கே.ஆர்.திவாரி, பிஷ்ணு பிரசாத் திவாரி, குமார் ராஜீவ், அசுதோஷ் சர்மா, திருமதி குஞ்சன் சர்மா, மகேந்திர குமார், ராம் சஜ்ஜன் மிஸ்ரா, திருமதி சுவாதி ஜெயின், ஆர்.கே.பாலி, திருமதி மேக்னா பாலி, தீப்கரன் தலால், அனில் கவுசிக், ரஜத் ராணா, திருமதி அஞ்சு கவுசிக், திருமதி. அருணிமா திவிவேதி, திருமதி அல்கா சின்ஹா, அனுவ்ரத் சர்மா, எம்.ஆர்.ஷம்ஷாத், முகமது வகுவாஸ், அரிஜித் சர்க்கார், திருமதி.நபீலா ஜமீல், சலீம் கான், சுரேந்திர கே.ஆர். குப்தா, நிஷால் குமார் நீரஜ், கே.எஸ்.ராணா, சுனில் குமார் ஜெயின், செல்வி. ரீட்டா

சவுத்ரி, அனீஷ் மிட்டல், திருமதி.காமினி ஜெய்ஸ்வால், அகிலேஷ் கல்ரா, ரோஹித் குமார் சிங், ஹர்ஷ் ஜெயின், சிம்ரன்ஜீத் சிங் ரேகி, சுபம் குமார், திருமதி.ராணி மிஸ்ரா, சிரஞ்சீவ் ஜோஹ்ரி, பிரதீப் குமார் மாத்தூர், கங்கா சாகர் சிங், ஆஷிஷ் குமார் சௌரோசியா, ராஜேஷ் குமார் சவுராசியா, அனுராக் நகர் முன்னிலையான தரப்பினர்களுக்கான வழக்கறிஞர்கள்.

இந்நீதிமன்றத்தின் தீர்ப்பு மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர். ஷாஹ் அவர்களால் வழங்கப்பட்டது.

1. ஏறக்குறைய 16 ஆண்டுகளுக்கு (மேல்முறையீட்டாளரைப் பொறுத்தவரை 26 ஆண்டுகள் காலதாமதம்) பின்பு தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டை உயர்நீதிமன்றம் நிராகரித்து நொய்டா நிலா உரிமையாளர்களுக்கு வழங்கக்கூடிய இழப்பீட்டை ரூ.297/-என உயர்நீதிமன்றம் உயர்த்தி, முதல் குறையுற்ற மேல்முறையீடு எண் 308/2015 இல் அலஹாபாத் உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட 28.01.2020 தேதியிடப்பட்ட குறையுற்ற தீர்ப்புரை மற்றும் உத்தரவினால் இடருற்றும் அதிருப்தியுற்றும் இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்படுகிறது.

2. தற்போதைய மேல்முறையீட்டுக்கு வழிவகுக்கும் உண்மைகள் சுருக்கமாக பின்வருமாறு கொடுக்கப்படுகிறது:

கேள்விக்குரிய நிலம் காசியாபாத் மாவட்டம் (இப்போது கௌதம் புத்த நகர் மாவட்டம்), தாத்ரி தெஹ்சில் மற்றும் பர்கானாவில் உள்ள கெஜா திலபதாபாத் கிராமத்தில் நொய்டாவால் 22.11.1982 தேதியிடப்பட்ட, பிரிவு 4 கீழ் வெளியிடப்பட்ட அறிவிக்கையின் மூலம் திட்டமிடப்பட்ட வளர்ச்சிக்காக கையகப்படுத்தப்பட்டது. நிலம் கையகப்படுத்துதல் சட்டம், 1894 இன் பிரிவு 6 இன் வகையங்களின் கீழ் ஒரு பிரகடனம் 23.11.1982 அன்று வெளியிடப்பட்டது. கையகப்படுத்தப்பட்ட

நிலத்தின் உரிமை மாநில அரசாங்கத்தால் 22.02.1983 அன்று எடுத்துக் கொள்ளப்பட்டது. நிலம் கையகப்படுத்தும் அதிகாரி/மாவட்ட ஆட்சியர் 05.09.1983 தேதியிட்டு ஒரு தீர்ப்பு அறிக்கையிட்டு கிராமத்திலேயே சில நிலங்களின் 02.11.1982 தேதியிட்ட விற்பனைப் பத்திரத்தின் அடிப்படையில் ஒரு பிகாவிற்கு ரூ.30,000/- இழப்பீடு என்று வழங்கினார்/நிர்ணயித்தார். வழக்காடும் எதிர்மேல்முறையீட்டாளர்களின் தந்தை இந்த இழப்பீட்டை ஏற்றுக்கொண்டார்.உண்மையான உரிமையாளர்களுக்காக - வழக்காடும் எதிர்மேல்முறையீட்டாளர்களின் தந்தையால் வழங்கப்பட்ட தொகையை எதிர்த்து நிலம் கையகப்படுத்தும் சட்டம் பிரிவு 18 இன் கீழ் மறுப்புத் தெரிவித்து ஒரு குறிப்பீடு வைக்கப்பட்டது. அசல் உரிமைகோருநர்கள் ஒரு பிகாவிற்கு ரூ.60,000/- என்ற விகிதத்தில் இழப்பீடு கோரினர். முறையீட்டில், குறித்தனுப்புகை நீதிமன்றம், 04.05.1989 தேதியிட்ட விரிவான தீர்ப்புரை மற்றும் உத்தரவின் மூலம் மற்ற குறிப்பீடுகளுடன் சேர்த்து மேற்சொன்ன குறிப்பீட்டையும் தள்ளுபடி செய்தது. மறுஆர்வு விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டு அவை 1998 ஆம் ஆண்டு தள்ளுபடி செய்யப்பட்டன. மறுஆய்வு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட தேதியிலிருந்து 16 ஆண்டுகளுக்குப் பிறகு, 201/2015 ஆம் ஆண்டில் எதிர்மேல்முறையீட்டாளர்கள் இந்த முதல் மேல்முறையீட்டை உயர்நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்தனர், மேலும் ஒரு சதுர அடிக்கு ரூ.297/- என்று இழப்பீட்டை உயர்த்திய மற்ற முதல் மேல்முறையீடுகளின் தீர்ப்பினை சார்வுற்றனர். குறையுற்ற தீர்ப்பு மற்றும் உத்தரவில் உயர்நீதிமன்றம், 16 ஆண்டுகள் காலதாமதத்தை மன்னித்தது, இருப்பினும் தாமதமான காலத்திற்கான வட்டியை மறுத்தது, இழப்பீட்டுத் தொகையை ஒரு சதுர அடிக்கு ரூ.297/-என்று உயர்த்தியது. எனவே நோய்டாவின் சார்பாக இந்த மேல்முறையீடுதாக்கல் செய்யப்படுகிறது.

3. மறுஆய்வு விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்ட 16 ஆண்டு காலம் மற்றும் குறித்தனுப்புகை நீதிமன்றத்தின் தீர்ப்பு வழங்கப்பட்டதிலிருந்து 26 ஆண்டு காலத்திற்கு பிறகு இந்த

வழக்கை விசாரித்து உயர்நீதிமன்றம் அடிப்படைப்பொருளில் பிழைத்துள்ளதாக நொய்டாவின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் முனைப்புடன் வாதிட்டார்.

3.1 தகுதியின் அடிப்படையிலும், 1982 இல் நிலம் கையகப்படுத்துதல் சம்பந்தப்பட்ட சட்டபூர்வ வாரிசுதாரர்கள் மூலம் ஆஷா ராம் (இறந்தவர்) மற்றும் பலர் எதிர் உ.பி. அவாஸ் அவாம் விகாஸ் பரிஷத் மற்றும் பலர் (2022) 2 எஸ்சிசி 567 என்ற வழக்கின் இந்நீதிமன்றத்தின் பின்னிட்ட தீர்ப்பின் நோக்கிலும், இந்நீதிமன்றம் இழப்பீட்டை ஒரு சதுர அடிக்கு ரூ.120/- என்று குறைத்தது, உயர்நீதிமன்றம் வழங்கிய சதுர அடிக்கு ரூ.297/- என்ற விகிதத்தில் இழப்பீட்டைப் பெற உரிமை கோருநர்களுக்கு உரிமை இல்லை என பணிந்துரைத்தனர்.

3.2 உ.பி. அவாஸ் அவம் விகாஸ் பரிஷத் (மேற்படி) வழக்கில், நரேந்திரா மற்றும் பலர் எதிர் உத்தரபிரதேச மாநிலம் மற்றும் பலர் , (2017) 9 எஸ்.சி.சி 426 என்ற வழக்கில் இந்நீதிமன்றம், 1988 ஆம் ஆண்டு செய்யப்பட்ட நில கையகப்படுதலுக்கு சதுர அடிக்கு ரூ.297/- என்று இழப்பீடு அளித்த முந்தைய தீர்ப்பைப் பரிசீலனை செய்தது என்று சமர்ப்பிக்கப்பட்டது. எனினும், 1982-1986/1988 ஆம் ஆண்டுகளுக்குள் நடந்த மேம்பாடுகளை பரிசீலனை செய்து, இந்நீதிமன்றம் உ.பி. அவாஸ் அவம் விகாஸ் பரிஷத் (மேற்படி) வழக்கில் சதுர அடிக்கு ரூ.297/- கோரிய உரிமை கோருநர்களின் வாதத்தை ஏற்கவில்லை, 1982 ஆம் ஆண்டு கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு சதுர அடிக்கு ரூ.120/- என்ற இழப்பீடு நிர்ணயித்தது என்று சமர்ப்பித்தது.

4. இந்த மேல்முறையீட்டை எதிர்த்த அசல் உரிமைகோருநர்களின் கற்றறிந்த வழக்கறிஞர், இந்த வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளைப் பொறுத்து, உரிமை கோருநர்கள் நியாயமான இழப்பீட்டை பெறத் தகுதியுடையவர்கள் எனக் கருதிய உயர்நீதிமன்றம் 16/26 ஆண்டு காலதாமதத்தை மன்னித்ததில் தவறவில்லை என முனைப்புடன் வாதிட்டனர்.

4.1 அருகில் உள்ள கிராமங்களை இதைப் போன்ற கையகப்படுத்துதல் சம்பந்தப்பட்டு 2014 பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவின் மூலம் முடிவான மற்ற நில உரிமையாளர்களின் வழக்கில் இழப்பீட்டுத் தொகை சதுர அடிக்கு ரூ. 297/- என உயர்த்தப்பட்டது என்று சமர்ப்பித்தனர். அதை பின்பற்றியே தற்போதைய வழக்கிலும் சதுர அடிக்கு ரூ. 297/- என்ற இழப்பீட்டுத்தொகை வழங்கப்பட்டது, அதை நியாயமற்றது என்று கூற முடியாது மேலும் உயர்நீதிமன்றம் எந்தத் தவறும் செய்யவில்லை.

4.2 அசல் உரிமைகோருநர்களின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், சதுர அடிக்கு ரூ.297/- இழப்பீடு நிர்ணயித்து உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்டு, இந்நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்ட கீழ்கண்ட முடிவுகளை வலுவாக சார்ந்துள்ளது.

அட்டவணை

விவரங்கள் மகன்பூர் கிராமத்தில் கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் தீர்ப்புகளின் பட்டியல்				
வ. எண்	கிராமம்	அறிவிக்கையின் தேதி மற்றும் இழப்பீடு (ஒரு சதுர அடிக்கு)	நீதிமன்றத்தின் தீர்ப்பு	பக்க எண்கள்
1.	மகன்பூர் (வைஷாலி) மாவட்டம், கசியாபாத், தேசில் தாத்ரி	12.09.1986/ 28.02.1987 [ரூ.297/-]	ஜிடிஎ எதிர் காசி ராம் இல் எஃப்.ஏ.எண் 910/2000 ரி (டிஓஜே :13.11.2014) எஸ்.எல்.பி (சி) எண் 5815/2015 ஜிடிஎ எதிர் காசி ராம் 05.05.2015 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது.	6-26 27-32

			மறுஆய்வு மனு (சி) எண் 2632/2015 06.10.2015 இல் தள்ளுபடி செய்யப்பட்டது நிவாரண மனு (சி) எண் 94/2016 15.03.2016 இல் தள்ளுபடி செய்யப்பட்டது	33-34 35-37
2.	மகன்பூர்(பிரிவு 62, நொய்டா) கவுதம் புத் நகர் மாவட்டம், தேசில் தாத்ரி	15.03.1988 [ரூ.297/-]	மகன்பூருக்கு ரூ.135/- இழப்பீடு அளித்து எப்.எ.எண் 737 இல் நொய்டா எதிர் சுரேந்திர சிங் வழக்கில் உயர்நீதிமன்றத்தின் 15.04.2015 தேதியிட்ட தீர்ப்பு இந்நீதிமன்றத்தின் 16.02.2016 தேதியிட்ட பிரதீப் குமார் எதிர் உ.பி மாநிலம் (2016) 6 எஸ்.சி.சி.308 வழக்கின் உரிமையியல் மேல்முறையீடு எண் 1506-1517/2016 தீர்ப்பின் மூலம் தள்ளுபடி செய்யப்படுகிறது; புதியதாக பரிசீலிக்க மறுபடியும் அனுப்பப்படுகிறது. மறுபடியும் அனுப்ப மு.மே.எண் 737 நொய்டா எதிர் சுரேந்திர சிங் வழக்குடன் மற்ற முதல் மேல்முறையீட்டு வழக்குகளை தள்ளுபடி செய்து, விவசாயிகளின் முதல் மேல்முறையீடு	38-95 96-98 99-124

			அனுமதிக்கப்பட்டது (மு.மே.எண் 522/2009 பிரதீப் குமார் எதிர் உ.பி மாநிலம், முதல் வழக்காக இருக்கையில்) 21.01.2016 தேதியிட்ட இறுதி தீர்ப்புரை மூலம் ஒரு சதுர அடிக்கு 297/-வழங்கப்பட்டது. இது இறுதி நிலையை அடைந்து விட்டது. [குறிப்பு: இந்த வழக்குத் தொகுப்பில், அதே அறிவிக்கையை சேர்ந்ததால் 21.04.2014 தேதியிட்ட தீர்ப்பின் அடிப்படையில் ஒரு சதுர அடிக்கு ரூ. 297/- வழங்கப்பட்டது மற்றும் அதே மகன்பூர் கிராமம் மற்றும் அவரை ஒரே குறித்தனுப்புகை நீதிமன்றத்தின் தீர்ப்பிலிருந்து எழுகிறது.]	
3.	மகன்பூர், (வைஷாலி,) கசியாபாத் மாவட்டம், தேசில் தாத்ரி	12.09.1986/ 24.02.1988 [ரூ.297/-]	மேல்முறையீடு எண் 10429-10430/2017 நரேந்திர எதிர் உ.பி. மாநில அரசு (2017) 9 எஸ்.சி.சி. 426 இல் ரூ.297/- என்ற விகிதத்தில் இழப்பீடு வழங்கப்படுகிறது.	125-135
4.	மகன்பூர், (இந்திராபுரம்) கசியாபாத் மாவட்டம், தேசில் தாத்ரி	16.08.1988 [ரூ.297/-]	இந்நீதிமன்றம் உரிமையியல் மேல்முறையீடு எண் 16960/2017, ஜெய்ப்ரகாஷ்	136-137

			(இ) எதிர் உ.பி. மாநில அரசு, (2020) 11 எஸ்.சி.சி. 770 என்று அறிவிக்கப்பட்ட வழக்கில் 24.11.2017 தேதியிட்ட தீர்ப்பின் மூலம் ரூ.297/-என்ற விகிதத்தில் இழப்பீடு வழங்கப்படுகிறது.	
5.	மகன்பூர், (இந்திராபுரம்) கசியாபாத் மாவட்டம், தேசில் தாத்ரி	16.08.1988 [ரூ.297/-]	இந்நீதிமன்றம் உரிமையியல் மேல்முறையீடு எண் 16961/2017, ஓம்ப்ரகாஷ் (இ) எதிர் உ.பி. மாநில அரசு, (மேற்படி)ஜெய்பிரகாஷ் வழக்கில் 24.10.2017 தேதியிட்ட தீர்ப்பின் மூலம் ரூ.297/-என்ற விகிதத்தில் இழப்பீடு வழங்கப்படுகிறது.	
6.	மகன்பூர், (வைஷாலி,) கசியாபாத் மாவட்டம், தேசில் தாத்ரி	12.09.1986/ 28.02.1987 [ரூ.297/-]	இந்த வழக்கும் மேலே குறிப்பிடப்பட்ட காஷி ராம் தீர்ப்பு(மேற்படி) யிலிருந்து எழுகிறது. காஷி ராம் வழக்கின் தீர்ப்பிலிருந்து சிஎம்எஎண் எண் 194412/2016 வழக்குத் தொகுப்பில் காஷி ராம் (மேற்படி) உடன் ஒன்றாக முடிவாக்கப்பட்ட, மேல்முறையீடுகளில் ஒன்றான எப்எ.எண் 484/2019, காசியாபாத் மேம்பாட்டு ஆணையம் எதிர் திரிலோக் சந்த் மற்றும் பலர் வழக்கில், சதுர அடிக்கு ரூ.297/- என்ற விகிதத்தில்	138-139

			நிர்ணயிக்கப்பட்ட இழப்பீட்டிலிருந்து மேம்பாட்டு கட்டணம் என்று 33% கழித்தல் கோரப்பட்டிருந்தது அது நிராகரிக்கப்பட்டது. எஸ்.எல்.பி (சி) எண் 12547/2017, காசியாபாத் மேம்பாட்டு ஆணையம் எதிர் திரிலோக் சந்த் மற்றும் பலர் என்ற எஸ்.எல்.பி. மேற்சொன்ன தள்ளுபடி செய்த தீர்ப்பை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டது, அதில் 28.04.2017 தேதியிட்ட உத்தரவின் மூலம் அறிவுப்பு அனுப்பும் போது, ஜிடிஎ 33%மேம்பாட்டு கட்டணம் கழிக்கப்படடதததால் குறையவுற்றதாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. எனினும் மேற்சொன்ன எஸ்.எல்.பி 03.08.2017 தேதியிட்ட உத்தரவின் மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது.	140-141
7.	மகன்பூர், (இந்திராபுரம்) கசியாபாத் மாவட்டம், தேசில் தாத்ரி	16.08.1988	இந்நீதிமன்றம் உரிமையியல் மேல்முறையீடு எண் 9208-	142-144

			9211/2018, மங்கு சிங் (இ) எதிர் உ.பி. மாநில அரசு, 10.09.2018 தேதியிட்ட தீர்ப்பின் மூலம் ரூ.297/- என்ற விகிதத்தில் இழப்பீடு அதிகரிக்கப்படுகிறது.	

மேற்கண்ட சமர்ப்பிப்புகளை முன்வைத்தும் உயர்நீதிமன்றம் மற்றும் இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட மேற்கண்ட முடிவுகள்/உத்தரவுகளை சார்ந்தும் இந்த மேல்முறையீட்டை தள்ளுபடி செய்யுமாறு வேண்டுரைக்கப்படுகிறது.

5. தரப்பினரின் சார்பாக வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞரின் வாதுரைகளை நாங்கள் முழுமையாக கேட்டோம்.

5.1 16/26 ஆண்டு காலதாமதத்தை மன்னித்து இந்த வழக்கை விசாரித்து உயர்நீதிமன்றம் பிழைத்துள்ளது என்று மேல்முறையீட்டாளர்களின் சமர்ப்பிப்புகளை பொறுத்தவரை, இவ்வழக்கின் அசாதாரணமான பொருண்மைகளை மற்றும் சந்தர்ப்பங்களைப் பொறுத்தும், இவ்வழக்கை விசாரித்து இழப்பீட்டுத் தொகையை உயர்த்தியபோதும், உயர்நீதிமன்றம் தாமதமான காலத்திற்கான வட்டியை நிராகரித்து, உரிமைகோருநர்களுக்கு ஆதரவாக தன் விருப்புரிமையை நிறைவேற்ற மறுத்துள்ளது என்ற பொருண்மையை பரிசீலிக்கையில், இந்த வழக்கை விசாரிக்க காலதாமதத்தை மன்னித்து பிறப்பித்த உத்தரவில் இடையீடு செய்வது எங்களுக்கு நியாயமாக படவில்லை.

5.2 இந்நீதிமன்றத்தின் தகுதி மற்றும் ஒரு சதுர அடிக்கு ரூ.297/- என்று இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட குறையுற்ற தீர்ப்பு மற்றும் உத்தரவைப்

பொறுத்தும், மேலே குறிப்பிடப்பட்ட உயர்நீதிமன்றம் மற்றும் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புகள் மேல் வைக்கப்பட்ட சார்பையும் மற்றும் உரிமைகோருநர்களின் சார்புகளையும் பொறுத்தும், ஆரம்பத்தில், தற்போதைய வழக்கில், கையகப்படுத்தல் 1982 ஆண்டு நடத்தப்பட்டது என்பதும், மற்ற அனைத்து வழக்குகளிலும் கையகப்படுத்தல்(கள்) 1986/88 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. சதுர அடிக்கு ரூ.297/- இழப்பீடு உயர்த்தி வழங்கிய மற்ற எல்லா வழக்குகளிலும் நொய்டா / காசியாபாத் வளர்ச்சிற்காக மகன்பூர் கிராமம் மற்றும் அருகிலுள்ள பிற கிராமங்களில் நிலம் கையகப்படுத்துதல் நடத்தப்பட்ட ஆண்டு 1986/1988. எனினும். உ.பி. அவஸ் அவம் விகாஸ் பரிஷத் (மேற்படி) என்ற வழக்கிலும், 1982 ஆம் ஆண்டில் மகன்பூர் கிராமம் மற்றும் பிரகலாத்கர் கிராமம், சாஹிபாபாத் கிராமம், அர்தாலா கிராமம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பிற கிராமங்களிலும் செய்யப்பட்ட நிலம் கையகப்படுத்துதல் சம்பந்தமான நரேந்திரா & பலர் (மேற்படி) வழக்கின் இந்நீதிமன்றத்தின் முடிவுகளை பரிசீலித்தப் பின்னும், இந்நீதிமன்றம் இழப்பீட்டை சதுர அடிக்கு ரூ.120/- என நிர்ணயித்தது. மேற்சொன்ன முடிவில், 1988 ஆம் ஆண்டு செய்யப்பட்ட நிலம் கையகப்படுத்தலுக்கு நரேந்திரா & பலர் (மேற்படி) வழக்கில் வழங்கப்பட்ட சதுர அடிக்கு ரூ.297/- கோரிக்கையை நிராகரித்த இந்நீதிமன்றம், அறிவிக்கை செய்த 5 ஆண்டுகளுக்குப் பிறகு நிர்ணயிக்கப்பட்ட இழப்பீடு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு அளவுகோலாக இருக்கமுடியாது என்று முடிவுரைத்தது. 1982 மற்றும் 1987/1988 ஆண்டுகளுக்கிடையில் ஏற்பட்ட மேம்பாடுகளையம் இந்நீதிமன்றம் கவனத்தில் கொண்டுள்ளது. உ.பி. அவாஸ் அவம் விகாஸ் பரிஷத் (மேற்படி) வழக்கில் இந்நீதிமன்றம் வகுத்த சட்டத்தை இவ்வழக்கில் செலுத்தும்போது, கையகப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து 5 ஆண்டுகள் கழித்து கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு வழங்கப்படும் அதே இழப்பீட்டை பெற உரிமை கொருநர்களுக்கு உரிமை இல்லை. மேலே குறிப்பிட்டுள்ளவாறு இந்த வழக்கில் பிரிவு 4 இன் கீழான அறிவிக்கை 22.11.1982 அன்று வெளியிடப்பட்டது, சார்வுறப்பட்ட மகன்பூர் கிராமம் மற்றும் பிற கிராமங்கள் தொடர்பான முடிவுகள் 1986/88 ஆம் ஆண்டை சார்ந்த முடிவுகள் என்பதால் அவை

உ.பி. ஆவாஸ் அவம் விகாஸ் பரிஷத் வழக்கின் தீர்ப்பில் இந்த நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளபடி, அடிப்படையாக இருக்கமுடியாது. மேற்சொன்ன சூழ்நிலைகளில், சதுர அடிக்கு ரூ.297/- வழங்கி உயர்நீதிமன்றம் பிறப்பித்த குறையற்ற தீர்ப்பு மற்றும் உத்தரவு நிலைக்கத்தக்கதல்ல, மேலும் சதுர அடிக்கு ரூ.120/- பெறவே உரிமைகோருநர்கள் தகுதியுடையவர்கள் என்று முடிவுரைக்கப்படுகிறது.

6. மேற்சொன்னவற்றின் நோக்கிலும் மேற்சொன்ன காரணங்களுக்காகவும் நிகழ் மேல்முறையீடு பகுதியாக வெற்றியடைகிறது. இதனால் உயர்நீதிமன்றம் பிறப்பித்த குறையுற்ற தீர்ப்பு மற்றும் உத்தரவு மாற்றியமைக்கப்படுகிறது. அசல் உரிமை கோருபவர்களுக்கு ஒரு சதுர அடிக்கு ரூ.120 வீதம் இழப்பீட்டுத் தொகை வழங்கவும் நிலம் கையகப்படுத்துதல் சட்டம், 1894 இன் கீழ் மற்ற அனைத்து சட்டரீதியான சலுகைகள் மற்றும் வட்டி வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. எனினும் உரிமைகோருபவர்களுக்கு உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதில் தாமதமான காலத்திற்கு அதாவது மறுஆய்வு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட நாளிலிருந்து முதல் மேல்முறையீடு தாக்கல் செய்யப்படும் வரை 1894 ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் உயர்த்தப்பட்ட இழப்பீட்டுத் தொகைக்குரிய வட்டி உட்பட சட்டபூர்வ பலன்களுக்கு உரிமை இல்லை.

மேற்சொன்ன அளவில் தற்போதைய வழக்கு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."